## பிறதுறை மாணவர்களுக்கான விருப்பப் பாடம்

## *இந்திய ஆட்சிப்பணித் தேர்வுத் தமிழ் 1*

Tamil for Indian Administrative service Exam 1

**(22TAMNME1A)**

**நோக்கம்**

- தமிழ் மொழி வரலாற்றினைப் பகர்தல்.
- இந்திய மொழிக் குடும்பங்களை அறிமுகம் செய்தல்.
- திராவிட மொழிகளை இனங்காணுதல்.
- திராவிட மொழிகளின் ஒப்பாய்வினை இயம்புதல்.
- திராவிட மொழிகளை ஒலியியல், சொல்லியல், உருபனியல், தொடரியல் அடிப்படையில் ஆய்ந்துரைத்தல்.
- கவிதை, நாடகம், புனைகதை, உரைநடை முதலான இக்கால இலக்கியங்களை அறிமுகம் செய்தல்.
- கவிதையின் அமைப்பு, உத்திகள், கவிதைப் படைப்பாளர்களுக்குரிய தனித் தன்மைகள் ஆகியவற்றை விளக்குதல்.
- கவிதையில் காலந்தோறும் நேர்ந்த அக, புற மாற்றங்களும் வளர்ச்சிகளும் பற்றிக் கூறுதல்.
- மரபுக்கவிதை, புதுக்கவிதை எனும் பாகுபாட்டை விளக்குதல்.
- கவிதைப் படைப்பாளர்களின் படைப்பாற்றலையும் படைப்பாளர்களுக்குரிய தனித்தன்மைகளையும் மொழிதல்.
- நாடகத்தின் வரலாறு, வளர்ச்சி, வகைமை, நடைச்சிறப்புப் போன்றவற்றை இயம்புதல்.
- நாடகத்தின் அமைப்பு, உள்ளடக்கங்கள், உத்திகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதுடன் நாடகத்தின் பல்வேறு சிறப்பியல்புகளையும் புலப்படுத்துதல்.
- தமிழ்க் கவிதை இலக்கியத்தில் ஹைக்கூ, சென்டிரியூ, கஜல், லிமரைக்கூ, போன்சாய் போன்ற புதிய வடிவக் கவிதைகளை அறிமுகம் செய்வதுடன் அக்கவிதைகளின் சிறப்பியல்புகளையும் கவிஞர்களின் தனித்தன்மைகளையும் விளம்புதல்.
- சிறுகதையின் அமைப்பு, உத்திகள், சிறுகதைப் படைப்பாளர்களுக்குரிய தனித்தன்மைகள் ஆகியவற்றை விளக்குதல்.
- புதினத்தின் அமைப்பு, உள்ளடக்கங்கள், உத்திகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதுடன் புதினங்களின் பல்வேறு சிறப்பியல்புகளையும் புலப்படுத்துதல்.
- புதினப் படைப்பாளர்களின் படைப்பாற்றலையும் படைப்பாளர் ஒவ்வொருவருக்கும் உரிய தனித்தன்மைகளையும் மொழிதல்.
- தமிழ் உரைநடையின் வரலாறு, வளர்ச்சி, வகைமை, நடைச் சித்திரங்கள் போன்றவற்றை இயம்புதல்.
- தமிழ் இலக்கியக் கொள்கைகள், கோட்பாடுகளை விளக்குதல்.
- இலக்கிய இயக்கங்களை (Literary Movements) இயம்புதல்.

- மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளை விவரித்தல்.
- நவீன இலக்கிய இசங்களையும் அண்மைக்காலப் போக்குகளையும் விளம்புதல்.
- தமிழ்ச் சூழலில் புதிய அணுகுமுறைகளை, உலக இலக்கியக் கொள்கைகளை, கோட்பாடுகளை அறிமுகம் செய்தல்.
- தமிழரின் அக, புறப் பண்பாட்டினையும் போர் அறங்களையும் இயம்புதல்.
- தமிழரின் ஐந்திணை மரபுகளான பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் முதலானவற்றை விளம்புதல் வேண்டும்.
- நாட்டுப்புறவியலின் அனைத்துப் பரிணாமங்களையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல்.
- சங்க மருவிய காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களை நவில்தல்.
- பல்லவர், பிற்காலச் சோழர், நாயக்கர்கள் வளர்த்த கலை வளர்ச்சி பற்றி விளக்குதல்.
- தமிழ்ச் சமூக, பண்பாட்டு மாற்றங்களுக்கு ஊடகங்கள் ஆற்றிய பங்களிப்பினைப் பகர்தல்.
- நாட்டுப்புறவியல் ஆய்வுப் போக்குகளை எடுத்துக் கூறி நாட்டுப்புறத்துறை சார்ந்த ஆய்வுகள் செய்ய ஊக்கப்படுத்துதல்.
- இந்திய ஆட்சிப் பணித்தேர்வு, தமிழக அரசுத் தேர்வு, கல்லூரி ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வு (SET, NET) முதலான தேர்வுகளுக்குத் தயார்படுத்துதல்.

**பாடத்திட்ட அமைப்பு**

- இந்திய ஆட்சிப் பணித்தேர்வுக்குழு அமைத்த பாடத்திட்டத்தின் அடிப்படையில் அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**அலகு *1.*** **தமிழ் மொழி வரலாறு :** இந்தியாவில் வழங்கும் முதன்மை மொழிக் குடும்பங்கள் - பொதுவாக இந்திய மொழிகளிலும் குறிப்பாகத் திராவிட மொழிகளிலும் தமிழ் மொழியின் இடம் - திராவிட மொழிக் குடும்பம் - திராவிட மொழிகளுக்குத் தமிழின் கொடை - திராவிட மொழிகளின் கணக்கீடும் வகைப்பாடும் - திராவிட மொழிகளும் அவை வழங்கும் இடங்களும் - திருந்திய திராவிட மொழிகள் - செப்பற்ற திராவிட மொழிகள் - திராவிட மொழிகளின் பொதுத் தன்மைகள் - திராவிட மொழிகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் - திராவிட மொழிகளுள் தமிழ் மொழிக்குரிய தனித்தன்மைகளும் சிறப்பியல்புகளும் - தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் - நடுத்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் - வட திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்.

**தமிழ் மொழியின் அமைப்பும் சிறப்பும் :** தமிழின் தொன்மை - தொல்காப்பியர் காலத் தமிழ் - சங்க இலக்கிய மொழி - இடைக்காலத் தமிழ் - பல்லவர் காலத் தமிழ் (மட்டும்) - தமிழின் தனித் தன்மைகள் - தமிழின் செம்மொழித் தகுதிகள்.

**வரலாற்று நோக்கில் தமிழ் இலக்கணம் :** பெயர்ச்சொற்கள் - வினைச்சொற்கள் - பெயரடைகள் - பெயரெச்சங்கள் - வினையடைகள் - வினையெச்சங்கள் - எச்ச

வினைகள் - வரலாற்று நோக்கில் காலம் காட்டும் இடைநிலைகள் - ஏவல் வினை - வியங்கோள் வினை - எதிர்மறை வினை - தமிழில் காலந்தோறும் துணை வினைகள்.

**பிறமொழி - கிளைமொழி - பேச்சுமொழி :** தமிழில் பிறமொழிக் கலப்பு - பிறமொழிகளில் தமிழ் - தமிழ்க் கிளைமொழிகள் - வட்டார மொழி கிளைமொழி : ஒற்றுமை வேற்றுமைகள் - பேச்சுத் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும் - பேச்சுத் தமிழின் இயல்புகள் - பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்குமான ஒற்றுமை வேற்றுமைகள்.

## குறியிலக்குகள் (Objectives)

1. இந்திய மொழிக்குடும்பங்களைப் பற்றி அறிந்து கொள்வர்.
2. ஒப்பீட்டுமுறை ஆய்வு ஒரு மொழியின் பல்வேறு நிலைகளையும் பல மொழிகளின் இயல்பினையும் அறியத் துணை செய்யும் என்பதை உணர்வர்.
3. திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளையும் அதன் உட்பிரிவுகளையும் கற்றறிவர்.
4. தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளையும் ஏனைய திராவிட மொழிகளை விடச் சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழ் என்பதையும் அறிந்துணர்வர்.
5. திணை, பால் பாகுப்பாட்டில் ஏனைய நடுத் திராவிட மொழிகளிலிருந்து தெலுங்கு வேறுபட்டு நிற்பதனையும் நடுத்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளையும் பண்டைத் தமிழினின்று பல்லவர் காலத் தமிழ் வேறுபட்டிருப்பதையும் அக்காலத் தமிழ் வளர்ந்த வளர்ச்சியையும் கற்றுணர்வர்.
6. சோழர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள் மூலம் சோழர்காலத் தமிழையும் புதிய கூறுகள் உருவாக்கத்தினையும் அறிந்து கொள்வர்.
7. பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் யாக்கப்பட்ட நாயக்கர் காலத் தமிழையும் வடமொழிச் சொற்களும் பிற மொழிச் சொற்களும் தமிழில் கலந்துவிட்ட மராட்டியர் காலத் தமிழையும் கற்றறிவர்.
8. ஐரோப்பியர் வருகையாலும் காலச் சூழல், சமுதாய மாற்றத்திற்கேற்ப இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் விரிவாக ஆராய்ந்துணர்வர்.
9. சாசன வழக்குத் தமிழுக்கும் இலக்கிய வழக்குத் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காண்பர்.
10. மொழியின் வளர்ச்சி, மாற்றம், வரலாறு என்ற கண்ணோட்டத்தில் கல்வெட்டுத்தமிழை நூற்றாண்டு வாரியாகப் பிரித்து ஆராயும் ஆற்றலைப் பெறுவர்.
11. கிளை மொழி ஆய்வு மொழி வரலாற்றுக்கும் சொல்லாக்கத்திற்கும் ஒப்பிலக்கண ஆய்வுக்கும் பெருந்துணை புரியும் என்பதை விளங்கிக் கொள்வர்.
12. மொழி அமைப்பினையும் வரலாற்றினையும் கற்றுணர்வர்.
13. திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மூல மொழியிலிருந்து பிறந்து வளர்ந்தவை என்பதை அறிந்து கொள்வர்.

14. மொழி வரலாற்றுக்கு ஆதாரமாகும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளின் மொழியமைப்பைக் கற்றறிவர்.
15. தொல்காப்பியரின் ஒலியியல், சொல்லியல், உருபனியல், தொடரியல் கொள்கை ஆய்ந்தறிவர்.
16. சங்ககாலத் தமிழ் தொல்காப்பியர் காலத் தமிழைப் பெரும்பான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் செல்வதை ஆராய்ந்துணர்வர்.
17. முன் பழந்தமிழ்க் கூறுகள் பின் பழந்தமிழ்க்கூறுகளில் சில மறைந்தற்கான காரண காரியங்களைக் கண்டறிவர்.
18. மாற்றுப் பெயர்களுள் (Pronouns) ஒன்றான மூவிடப் பெயர்கள் (Personal Pronouns) தொன்மையான இலக்கணக் கூறுகளுள் ஒன்றாகும் என்பதையும் திராவிட மொழிகளின் ஒற்றுமைக் கூறுகளை விளக்க இவை பெரிதும் துணை செய்கின்றன என்பதையும் அறிந்து கொள்வர்.
19. நாயக்கி மொழியைத் தவிர்த்த ஏனைய திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்கள் தெளிவாக உள்ளன என்பதை அறிந்து கொள்வர்.
20. திராவிட மொழிகளில் வினைகள் அமையும் முறைகளைக் கற்றுணர்வர்.

**அலகு 2. தமிழ் இலக்கிய வரலாறு :** சங்க நூல்கள் - தொல்காப்பியம் - தொல்காப்பியப் பொருளதிகாரமும் இலக்கிய வகைகளும் - தொல்காப்பியப் பொருளதிகாரமும் இலக்கியத் திறனாய்வும் - தொல்காப்பிய அகப்பொருட் கோட்பாடு - தொல்காப்பியப் புறப் பொருட்கோட்பாடு - சங்க இலக்கியத்தில் இயற்கை - சங்க காலப் புலவர்களின் இயல்புகள் - சங்க காலச் சமுதாயம் - சங்க இலக்கியத்தில் சமயச் சார்பின்மை - பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் - சங்க இலக்கியத்தின் தனித்தன்மைகள் - அகப்புறப் பாகுபாடு - சங்கம் மருவிய கால இலக்கியங்கள் - அற இலக்கியங்களின் வளர்ச்சி - பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்கள் - சங்கம் மருவிய கால இலக்கியத்தின் தனித்தன்மைகள் - இரட்டைக் காப்பியங்கள் - சிலப்பதிகாரம் - மணிமேகலை - சிலப்பதிகாரம் மணிமேகலை ஒற்றுமை வேற்றுமைகள்.

**குறியிலக்குகள் (Objectives)**

1. தமிழ் இலக்கிய வரலாற்றுப் பகுப்புகளையும் இலக்கியங்களின் உள்ளடக்கம், வடிவம், வளர்ச்சிக் கூறுகளையும் கற்றுணர்வர்.
2. தமிழின் தொன்மையையும் மொழி, இலக்கியம் பற்றிய தொல்காப்பியக் கோட்பாடுகளையும் தொல்காப்பியர் கூறும் தமிழரின் அக, புற வாழ்வியலையும் அறிந்து கொள்வர்.
3. சங்க இலக்கியத்தின் வகை, தொகை, வடிவமைப்பு, அக, புறச் செய்திகளை அறிந்துணர்வர்.
4. சங்ககால மக்கள் பாகுபாடும் வாழ்க்கையும் ஒழுக்கமும் நில இயற்கைக்கு ஏற்ப அமைந்திருந்தமையைக் கற்றுணர்வர்.

5. சங்க கால மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தமையையும் சமூக, பண்பாட்டுக் கூறுகளையும் அக்கால வாழ்வில் பிறநாட்டார் செல்வாக்கு இடம் பெற்றிருந்தமையையும் ஆராய்ந்து அறிந்து கொள்வர்.
6. சங்கம் மருவிய காலச் சமூகத்தில் திருக்குறள் முதலிய அறநூல்கள் தோன்றியதற்கான தேவையை விளங்கிக் கொள்வர்.
7. தமிழ்க் காப்பியங்களை விரிவாகக் கற்பதுடன் சமய வளர்ச்சியில் காப்பியங்களின் பங்களிப்பையும் காப்பியங்களின் கட்டமைப்புகளையும் மொழிக்கூறு உத்திகளையும் கற்றுணர்வர்.

**அலகு 3. பிற்கால இலக்கியங்கள் :** பக்தி இலக்கியங்கள் (ஆழ்வார்களும் நாயன்மார்களும்) - நாயக நாயகி பாவனை - ஆழ்வார் பாசுரங்களில் நாயகன் நாயகி பாவம் - சிற்றிலக்கியங்கள் - தூது, உலா, பரணி, குறவஞ்சி - இக்காலப் பிரபந்தங்கள். **இக்கால இலக்கியங்கள் :** புதிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான சமூகக் காரணிகள் - புதின இலக்கிய வளர்ச்சிக்கான சமூகக் காரணிகள் - சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கான சமூகக் காரணிகள் - தமிழில் நாவல் (புதின) இலக்கியம் - தமிழில் சிறுகதை இலக்கிய வளர்ச்சி - புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - நவீனத்தமிழ் இலக்கியங்களில் அரசியல் சமூக இலக்கியங்களின் தாக்கம் - தனித்தமிழ் இயக்கமும் இலக்கிய வளர்ச்சியும் - தேசியம் வளர்த்த தமிழ் - பொதுவுடைமை இயக்கமும் தமிழும்.

**குறியிலக்குகள் (Objectives)**

1. சைவ சமயக் குரவர்களின் இறைநெறிக் கோட்பாட்டையும் அவர்கள் தமிழகத்தில் சைவ சமயத்தை வளர்த்த முறைகளையும் அறிவதுடன் பக்தி இலக்கியங்களில் காணலாகும் புதிய யாப்பும் இசையும் பற்றி அறிந்து கொள்வர்.
2. வைணவப் பாசுரங்கள் வழி பலவகை யாப்பிசை அமைப்பினையும் வைணவ நெறிகள் பற்றியும் வைணவ சமய மறுமலர்ச்சிக்கு காரணமாக இருந்த ஆழ்வார்கள் பற்றியும் தெரிந்து கொள்வர்.
3. பல்வேறு சமயங்கள் தோன்றியதற்கான காலச் சூழலை நன்கு ஆராய்வதுடன் அச்சமயங்கள் ஆற்றிய இலக்கியப் பணிகளையும் கற்று அறிவர்.
4. தமிழ்ச் சிற்றிலக்கியத்தின் வகை தொகை, வடிவமைப்பு, அக, புறச் செய்திகள் முதலியவற்றைக் கற்பதுடன் அவ்இலக்கியங்கள் தோன்றிய காலச் சூழலையும் ஆராய்ந்தறிவர்.
5. அந்தாதி, உலா, கோவை, கலம்பக இலக்கியங்களின் இலக்கணம் பாட்டுடைத் தலைவன், கலம்பகத்தின் பலவகை உறுப்புகள், அகப்பொருள், புறப்பொருள் கூறுகள் போன்றவற்றைக் கற்றுணர்வர்.
6. ஐரோப்பியர் வருகையால் தமிழரிடமும் தமிழ் இலக்கியங்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து அறிவர்.
7. தமிழ் மக்களிடத்தும் தமிழ் இலக்கியங்களிலும் ஏற்பட்ட கிறித்துவத் தாக்கம் குறித்து அறிந்து கொள்வர்.

8. கவிதை இலக்கியங்களில் நேர்ந்த அக, புற மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பற்றி அறிவதுடன் கவிதைப் படைப்பாளர்களின் படைப்பாற்றலையும் தனித்தன்மைகளையும் கற்றறிவர்.
9. சிறுகதைப் படைப்பாளர்களையும் அவர்களின் படைப்பாக்கத் திறனையும் தனித்தன்மைகளையும் சிறுகதைப் படைப்புகளின் உருவ உள்ளடக்க வேறுபாடுகளையும் இனங்காண்பர்.
10. தமிழ்ப் புதினங்களின் அமைப்பு, வகைமைகள், உள்ளடக்கங்கள், உத்திகள், பாத்திரப்படைப்பு, நடை ஆகியவற்றைக் கற்றுணர்வர்.
11. நவீன இலக்கியக் கொள்கைகளைக் கற்றுணர்வதுடன் நவீனத்துவச் சிந்தனைகள் பழமையோடு முரணுதலுக்கான காரணங்களையும் அறிந்து கொள்வர்.
12. தமிழியக்கத்தை நவீனத்துவத்தை நோக்கி நகர்த்தியதற்கான காரணிகளையும் தமிழில் நவீனத்துவம் படைப்புத் துறையிலும் திறனாய்வுத்துறையிலும் செல்வாக்குப் பெற்றதற்கான காரணங்களையும் ஆய்ந்தறிவர்.
13. இலக்கியங்களில் இந்திய தேசிய இயக்கங்களின் தாக்கத்தினைத் திறனாய்ந்தறிவர்.
14. திராவிட இயக்கச் சிந்தனைகள், பொதுவுடைமை இயக்கக் கருத்துகள், பெரியாரிய இதழ்கள், இலக்கியங்கள் வாயிலாக ஏற்படுத்திய தாக்கங்களைக் கற்றுணர்வர்.
15. தமிழ்மொழியை முன்னிலைப்படுத்தித் தமிழர் ஒருமைப்பாட்டினையும் தமிழின் தனித்துவத்தையும் எடுத்தியம்பிய தனித்தமிழியக்கச் சிந்தனைகளையும் இலக்கியத் தூய்மைக் கொள்கையினையும் கற்றறிவர்.

**அலகு 4. தமிழ் ஆய்வின் அண்மைப் போக்குகள் :** திறனாய்வு அணுகுமுறைகள் - சமுதாயவியல் அணுகுமுறை - உளவியல் அணுகுமுறை - வரலாற்றியல் அணுகுமுறை - ஆய்வியல் அணுகுமுறை - **பல்வேறு வகை இலக்கிய உத்திகள்:** உள்ளுறை, இறைச்சி, தொன்மம் (Myth) - ஒட்டுருவகம் (Allegory), அங்கதம் (Satire) - மெய்ப்பாடு, படிமம் (Image), குறியீடு (Symbol), இருண்மை (ambiguity) - ஒப்பிலக்கியக் கருத்தாக்கம் - ஒப்பிலக்கியக் கொள்கைகள்.

## குறியிலக்குகள் (Objectives)

1. தமிழில் தாக்கம் ஏற்படுத்திய இலக்கிய இயக்கங்களைக் கற்றுணர்வர்.
2. தமிழ்ச் சூழலில் புதிய அணுகுமுறைகளையும் உலக இலக்கியக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்திய சிற்றிதழ்களை அறிந்து கொள்வர்.
3. இலக்கியத்தின் வடிவம், உணர்ச்சி, சுவை, அழகுகள், உத்திகள் முதலானவற்றிற்கு முக்கியத்துவம் நல்கும் ‘உருவவியம்’ குறித்துக் கற்றுணர்வர்.
4. இலக்கிய இயக்கியங்களைக் கற்றுணர்ந்து அவற்றை இலக்கியங்களில் ஆராய்ந்து அறியும் ஆற்றலைப் பெறுவர்.
5. இலக்கியத்தையும் உளவியலையும் திறனாய்வு அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி ஆராயும் ஆற்றலைப் பெறுவர்.

**அலகு 5. தமிழர் பண்பாடும் மரபும் நாட்டுப்புற இலக்கியங்களும் :** தமிழர் பண்பாட்டு மரபு - அகம் - புறம் - அறம் - பழந்தமிழர் போர் அறங்கள் - ஐந்திணை மரபுகள் :

வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டுகள் - சங்கம் மருவிய கால இலக்கியங்களில் பண்பாட்டு மாற்றங்கள் - இடைக்காலத்தில் பண்பாட்டுக் கலப்பு (சமணம், பௌத்தம்) - காலந்தோறும் கலை வளர்ச்சி (கலை, கட்டிடம், இசை, ஓவியம், கோயில்) பல்லவர் காலம், பிற்காலச் சோழர் காலம், நாயக்கர் காலம்) - தமிழ்ச் சமுதாயத்தில் அரசியல், சமுதாய, சமய, பண்பாட்டு இயக்கங்களின் தாக்கம் - தமிழ்ச் சமூகப் பண்பாட்டு மாற்றங்களுக்கு ஊடகங்களின் பங்களிப்பு - தமிழில் நாட்டுப்புற இலக்கியங்கள் - கதைப்பாடல்கள் - நாட்டுப்புறப் பாடல்கள் - பழமொழிகள் - விடுகதைகள் - சமூவியல் நோக்கில் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் - மொழிபெயர்ப்புப் பயன்பாடுகள் - பிறமொழிகளில் பெயர்க்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள் - தமிழ் இதழியல் வளர்ச்சி.

## குறியிலக்குகள் (Objectives)

1. இசைக் கலையின் வளர்ச்சியை விளங்கிக் கொள்வர்.
2. சிற்பக்கலை காலந்தோறும் பெற்ற வளர்ச்சியையும் அதன்வழி வெளிப்படும் பண்பாட்டையும் அறிவர்.
3. தழிழகக் கட்டடக்கலை பல்லவர் காலம் தொடங்கித் தற்காலம் வரைப் பெற்றுள்ள மாற்றங்களை உணர்வர்.
4. பழந்தழிழ்க் காலத்திலிருந்து வளர்ந்து வரும் ஓவியக் கலையையும் கூத்துக் கலையையும் அறிந்து அவை வெளிப்படுத்தும் பண்பாட்டுச் சிறப்பைத் தெரிந்து கொள்வர்.
5. பழமொழி, விடுகதை இரண்டையும் ஒப்பீட்டு நோக்கும் திறன் பெறுவர்.
6. நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை அறிவர்.
7. மொழிபெயர்ப்பின் பயன் குறித்த தெளிவினைப் பெறுவர்.
8. மொழிபெயர்ப்புப் பணியில் இலக்கிய மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை குறித்தும் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள் குறித்தும் கற்றறிவர்.
9. இதழ்களின் தோற்றம், வளர்ச்சி, பணிகள் குறித்து அறிவதுடன் அண்மைக் காலத்தமிழ் நாளிதழ்களின் மொழி நடை, போக்குகள் குறித்தும் அறிந்துணர்வர்.

## பயிற்றுமுறை

- தமிழ் மொழி வரலாற்றினைப் பகர்தல் வேண்டும்.
- இந்திய மொழிக் குடும்பங்களை அறிமுகம் செய்தல் வேண்டும்.
- திராவிட மொழிகளை இனம் பிரித்துக் காட்ட வேண்டும்
- திராவிட மொழிகளின் ஒப்பாய்வினை இயம்புதல் வேண்டும்.
- திராவிட மொழிகளை ஒலியியல், சொல்லியல், உருபனியல், தொடரியல் அடிப்படையில் ஆய்ந்துரைக்க வேண்டும்.
- மொழி அமைப்பினை வரலாற்று நோக்கில் கற்பிக்க வேண்டும்.

- மொழி வரலாற்றுக்கு ஆதாரமாகும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளின் மொழியமைப்பை இயம்புதல் வேண்டும்.
- சங்ககாலத் தமிழிலிருந்து தொல்காப்பியர் காலத்தமிழ் பெரும்பான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் செல்வதை ஆய்வடிப்படையில் விளம்புதல் வேண்டும்.
- பண்டைத் தமிழனின்று பல்லவர் காலத் தமிழ் வேறுபாட்டிருப்பதையும் அக்காலத்தில் தமிழ் பெற்ற வளர்ச்சியையும் சோழர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள் மூலம் சோழர்காலத் தமிழையும் புதிய கூறுகள் உருவாக்கத்தினையும் இயம்புதல்.
- நாயக்கர் காலத்தமிழையும் வடமொழிச் சொற்களும் பிற மொழி சொற்களும் தமிழில் கலந்துவிட்ட மராட்டியர் காலத் தமிழையும் மொழிதல் வேண்டும்.
- ஐரோப்பியர் வருகையாலும் காலச் சூழல், சமுதாய மாற்றத்திற்கேற்ப இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் விரிவாக விளக்குதல் வேண்டும்.
- சாசன வழக்குத் தமிழுக்கும் இலக்கிய வழக்குத் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காணுதல் வேண்டும்.
- மொழியின் வளர்ச்சி, மாற்றம், வரலாறு என்ற கண்ணோட்டத்தில் கல்வெட்டுத்தமிழை நூற்றாண்டு வாரியாகப் பிரித்து ஆராந்துரைக்க வேண்டும்.
- கிளை மொழி ஆய்வு மொழி வரலாற்றுக்கும் சொல்லாக்கத்திற்கும் ஒப்பிலக்கண ஆய்வுக்கும் பெருந்துணை புரியும் என்பதை விளக்குதல் வேண்டும்.
- இந்திய மொழிக்குடும்பங்களைப் பகர்தல் வேண்டும்.
- திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளையும் அவற்றின் உட்பிரிவுகளையும் கற்பித்தல் வேண்டும்.
- ஒலிப்பு ஒலிகள் தற்காலத் தமிழிலும் ஏனைய திராவிட மொழிகளிலும் இடம்பெற்றிருப்பினும் அவை துணை ஒலிகளாகவே கொள்ளப்படுகின்றன என்பதை மொழிதல் வேண்டும்.
- திராவிட மொழிகளின் ஒலி மாற்றங்களில் (உயிரொலிகள்) ‘இகர’, ‘உகர’, ‘ஒகர’ மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன என்பதை விளக்குதல் வேண்டும்.
- மொழி நூலார் மெய்யொலிகளை அவை பிறக்கும் இடம் (Points of articulation) நோக்கியும் ஒலிக்கும் இயல்பு (Manner of articulation) நோக்கியும் கூறுபடுத்தி விளக்கும் முறைமையினை இயம்புதல் வேண்டும்.
- திராவிட மொழிகளில் அமையும் வல்லொலி மெல்லொலி மாற்றங்களைக் கற்பித்தல் வேண்டும்.
- பெயர்ச் சொற்கள் திணை, பால், எண் உணர்த்தும் முறையினையும் (Gender number Distinition) மொழிக் குடும்பங்களுக்குள் வேறுபட்டு அமையும் மாற்றத்தினையும் விளக்குதல் வேண்டும்.
- திராவிட மொழிகள் வேற்றுமை உருபேற்கும் தன்மையினையும் முறையினையும் ஆய்ந்துரைத்தல் வேண்டும்.
- திராவிட மொழிகளில் பெயர், வினைகள் அமையும் முறைகளைக் கற்பித்தல் வேண்டும்.

- சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை தோன்றி வளர்ந்துள்ள இலக்கிய, இலக்கணங்கள் குறித்து இயம்புதல் வேண்டும்.
- தமிழ் இலக்கியப் பொருண்மை காலந்தோறும் மாறி வந்த நிலைகளையும் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களையும் பற்றி மொழிதல் வேண்டும்.
- இலக்கியம் தோன்றிய காலப் பின்புலத்தையும் சமூகச் சூழலையும் இலக்கியம் படைக்கப்படுவதற்கான தேவையையும் எடுத்துரைத்தல் வேண்டும்.
- தமிழ் இலக்கிய இலக்கணங்களை வரலாற்றினூடாக உணர்த்துதல் வேண்டும்.
- தமிழின் தொன்மையையும் மொழி, இலக்கியம் பற்றிய தொல்காப்பியக் கோட்பாடுகளையும் தொல்காப்பியர் கூறும் தமிழரின் அக, புற வாழ்வியலையும் விளக்குதல் வேண்டும்.
- தமிழ் இலக்கிய வரலாற்றுப் பகுப்புகளையும் இலக்கியங்களின் உள்ளடக்கம், வடிவம் மற்றும் வளர்ச்சிக் கூறுகளையும் கற்பித்தல் வேண்டும்.
- சங்கம் மருவிய காலச் சமூகத்தில் திருக்குறள் முதலிய அறநூல்கள் தோன்றியதற்கான தேவையை விளக்குதல் வேண்டும்.
- பல்வேறு சமயங்கள் தோன்றியதற்கான காலச் சூழலையும் அச்சமயங்கள் ஆற்றிய இலக்கியப் பணிகளையும் விளக்குதல் வேண்டும்.
- சைவம், வைணவம், இஸ்லாம், கிறித்துவ சமயத்தினரின் பணிகளை வரலாற்று அடிப்படையில் இயம்புதல் வேண்டும்.
- தமிழ்க் காப்பியங்களை விரிவாக விளக்குவதுடன் அக்காப்பியங்களின் கட்டமைப்புகளையும் மொழிக்கூறு உத்திகளையும் இயம்புதல் வேண்டும்.
- தமிழில் தோன்றிய பிற்கால இலக்கண நூல்கள், பாட்டியல் நூல்கள், நிகண்டுகள் முதலானவற்றை இயம்புதல் வேண்டும்.
- தமிழ்ச் சிற்றிலக்கியத்தின் வகை தொகை, வடிவமைப்பு, அக, புறச் செய்திகள் முதலியவற்றைக் கற்பித்தல் வேண்டும்.
- ஐரோப்பியர் வருகையால் தமிழரிடமும் தமிழ் இலக்கியங்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து விளக்குதல் வேண்டும்.
- மரபுக் கவிதை, புதுக்கவிதை, புதிய வடிவக் கவிதைகள், புனைகதை, உரைநடை, நாடகம், அயலகத் தமிழ் இலக்கியம், புலம்பெயர்ந்தோர் இலக்கியம், மொழிபெயர்ப்பு இக்கியம் போன்ற இலக்கியங்களில் காலந்தோறும் நேர்ந்த அக, புற மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் படைப்பாளர்களின் படைப்பாற்றலையும் தனித்தன்மைகளையும் எடுத்துரைத்தல் வேண்டும்.
- தமிழிலக்கியத்தை நவீனத்துவத்தை நோக்கி நகர்த்தியதற்கான காரணிகளையும் தமிழில் நவீனத்துவம் படைப்புத் துறையிலும் திறனாய்வுத்துறையிலும் செல்வாக்குப் பெற்றதற்கான காரணங்களையும் பகர்தல் வேண்டும்.
- இலக்கிய இயக்கங்களைத் (Literary Movements) தோற்றப் பின்புலத்துடன் இயம்புதல் வேண்டும்.
- மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளை விவரித்தல் வேண்டும்.
- நவீன இலக்கிய இசங்களையும் அண்மைக்காலப் போக்குகளையும் விளம்புதல் வேண்டும்.

➢ தமிழ்ச் சூழலில் புதிய அணுகுமுறைகளை, உலக இலக்கியக் கொள்கைகளை, கோட்பாடுகளை அறிமுகம் செய்தல் வேண்டும்.

பாடநூல்கள்

1. இராசேந்திரன் ம. (பொ. ப. ஆ.), 1999. தமிழ்மொழி வரலாறு (இந்திய ஆட்சிப் பணித் தேர்வு - தாள் 1), சென்னை : தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

**பார்வை நூல்கள்**


1. மீனாட்சி சுந்தரனார் தெ. பொ. 2013, தமிழ்மொழி வரலாறு, மதுரை : செல்லப்பா பதிப்பகம்.
2. இராசேந்திரன் ம. 1999, தமிழ்மொழி வரலாறு, சென்னை : தமிழ் வளர்ச்சி இயக்ககம்.
3. சக்திவேல் சு. 1998 தமிழ்மொழி வரலாறு, சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
4. சூரியநாராயண சாஸ்திரியார் வி. கோ . 2010 தமிழ்மொழியின் வரலாறு, சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
5. அருணாசலம் மு. 2005. **தமிழ் இலக்கிய வரலாறு** (14 தொகுதிகள்), சென்னை : பார்க்கர் பதிப்பகம்.
6. கார்த்திகேசு சிவத்தம்பி. **தமிழில் இலக்கிய வரலாறு.**
7. சுப்பிரமணிய பிள்ளை கா. 1930. **தமிழ் இலக்கிய வரலாறு,** சென்னை : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
8. செல்வநாயகம் வி. 1996. **தமிழ் இலக்கிய வரலாறு,** கொழும்பு : பூபால சிங்கம் புத்தகசாலை.
9. வரதராஜையர் இ.எஸ். 1957. **தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.1 முதல் 1100 வரை),** சிதம்பரம் : அண்ணாமலைப் பல்கலைகக்கழகம்.
10. சதாசிவப் பண்டாரத்தார் தி.வை. 1955. **தமிழ் இலக்கிய வரலாறு (3,4,5 ஆம் நூற்றாண்டு),** சிதம்பரம் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
11. துரைசாமிப்பிள்ளை சு. ஔவை. 1958. **சைவத் தமிழிலக்கிய வரலாறு, சிதம்பரம் :** அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
12. வெள்ளைவாரணர் க. 1979,1980. **பன்னிரு திருமுறை வரலாறு (தொகுதி 1,2),** சிதம்பரம் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
13. இராசமாணிக்கம் மா. **இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்,** தஞ்சை : இராசி பதிப்பகம்.
14. சிவபாத சுந்தரம் சிட்டி, **தமிழ் நாவல் ஒரு நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்.**
15. வல்லிக்கண்ணன். 1998. **புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்,** தஞ்சாவூர் : அகரம்.
16. சு. சண்முகசுந்தரம். 2008. **தமிழ் நாடகச் சரித்திரம் மரபிலிருந்து நவீனத்துக்கு,** சென்னை : காவ்யா.
17. அழகப்பன் ஆறு. 1987. **தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும்,** சிதம்பரம் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
18. கார்த்திகேசு சிவத்தம்பி. 2013. **நாவலும் வாழ்க்கையும்,** சென்னை : என்.சி.பி.எச்.

19. சிட்டி சிவபாத சுந்தரம். **தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்**
20. சிவத்தம்பி கா. 1980. **தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்,** சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.
21. சிற்பி பாலசுப்பிரமணியம். 2006. **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை,** சென்னை : உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.
22. சிற்பி பாலசுப்பிரமணியம் (தொ.ஆ.). 2013. **புதிய தமிழ் இலக்கிய வரலாறு,** சென்னை : சாகித்திய அகாதெமி.
23. மாதையன் பெ. **செவ்வியல் இலக்கியம் : காலமும் கருத்தும்.**
24. ரகுநாதன் தொ.மு.சி. **பாரதி காலமும் கருத்தும்.**
25. வரதராசன் மு. 2016. **தமிழ் இலக்கிய வரலாறு,** சென்னை : சாகித்திய அகாதெமி.
26. விமலானந்தம் மது.ச. 1987. **தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் (இரண்டு தொகுதிகள்),** சென்னை : ஐந்திணைப் பதிப்பகம்.
27. முத்துச்சண்முகம் 2014. **தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்,** சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
28. ஜீன் லாரன்ஸ் செ., பகவதி கு. (ப.ஆ.) 1998. **தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்,** சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
29. கார்த்திகேசு சிவத்தம்பி 2012. **தொல்காப்பியமும் கவிதையும்,** சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
30. இளமாறன் பா. (ப.ஆ.) 2008. **தொல்காப்பியம் பன்முக வாசிப்பு,** சென்னை : மாற்று.
31. தமிழண்ணல் 2005. **சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கிய வகைகள்,** மதுரை : மீனாட்சி புத்தக நிலையம்.
32. தமிழண்ணல் 2011. **சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள்,** மதுரை : மீனாட்சி புத்தக நிலையம்.
33. பிச்சமுத்து ந. 2006. **திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்,** சென்னை : சக்தி வெளியீடு.
34. நடராசன் தி.சு. 2012. **திறனாய்வுக் கலை,** சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
35. சிவகுமார் ஐ. 2011. **செவ்வியல் இலக்கிய ஆய்வுகள் செந்தமிழ் இதழ்க் கட்டுரைகள் (1902-1935),** சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
36. இராமநாதன் ஆறு. (ப.ஆ.), 2003. **நாட்டுப்புறவியல் களஆய்வு நெறிமுறைகள்,** திருவனந்தபுரம் : தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம்.
37. ஆலிஸ் அ. (ப.ஆ.), 2009. **பிறமொழி இலக்கியங்களில் சங்க இலக்கியங்களின் தாக்கம்,** திருச்சிராப்பள்ளி : பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
38. பிச்சமுத்து ந. 2006. **இலக்கிய இயக்கங்கள்,** சென்னை : சக்தி வெளியீடு.
39. இ.எஸ்.டி. (தொ.ஆ.), 2006. **இலக்கிய இஸங்கள்,** தஞ்சாவூர் : அகரம்.
40. தமிழவன், 2008. **அமைப்பியலும் அதன் பிறகும்,** திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
41. சாரதாம்பாள் செ. 2017. **இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்,** சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
42. பூரணச்சந்திரன் க. 2009. **அமைப்பியமும் பின் அமைப்பியமும்,** திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
43. அழகரசன் (தமிழில்), 2008. **கேதரின் பெல்ஸி பின் அமைப்பியல்,** திருச்சிராப்பள்ளி : அடையாளம்.

44. மங்கை அ. (தமிழில்), 2017. **ராபர்ட் ஜே.சி. யங் பின்காலனியம்,** திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
45. இராமநாதன் ஆறு. 1997. நாட்டுப்புறவியல் ஆய்வுகள், சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
46. லூர்து தே. 1997. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், பாளையங்கோட்டை : நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.
47. சக்திவேல் சு. நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
48. இராமநாதன் ஆறு. பக்தவச்சல ரெட்டி. என். 2003. நாட்டுப்புறவியல் கள ஆய்வு நெறிமுறைகள், சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
49. கைலாசபதி க. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்.
50. தட்சிணாமூர்த்தி அ . 1999 . தமிழர் நாகரிகமும் பண்பாடும், சென்னை : யாழ் வெளியீடு.
51. இராசமாணிக்கனார் மா. ரா. தமிழர் நாகரிகமும் பண்பாடும்.
52. பிள்ளை கே. கே. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்.
53. தேவநேயன் ஞா . தமிழர் நாகரிகமும் பண்பாடும்.
54. பரமசிவானந்தம் அ. மு . சமுதாயமும் பண்பாடும்.
55. வித்யானந்தன் சு. தமிழர் சால்பு.
56. தொல்பழங்காலம் - தமிழக அரசு வெளியீடு.
57. சோழப் பெருவேந்தர் காலம் - தமிழக அரசு வெளியீடு.
58. சதாசிவப் பண்டாரத்தார் தி . வை . பாண்டியர் வரலாறு.
59. இராசமணிக்கனார் மா. பல்லவர் வரலாறு.
60. பரந்தாமனார் அ. கி. மதுரை நாயக்கர் வரலாறு.
61. வேங்கடசாமி மயிலை . சீனி . களப்பிர் ஆட்சியில் தமிழகம்.
62. தாமோதரன் கு . வரலாறும் கலையும்.
63. வைத்தியலிங்கம் செ . தமிழர் பண்பாட்டு வரலாறு (மூன்று தொகுதி)
64. சீனி வேங்கடசாமி மயிலை . தமிழர் வளர்த்த அழகு கலைகள்

### இணையதள முகவரிகள்

1. www. tamilvu.org
2. www. sirukathaikal.com
3. www. noolulagam.com
4. www. katuraitamilblogspot.com

## Course Outcomes

1. Learn the history of tamil language and familes of Indian Languages.
2. Indentify Draviden Languages and compare various Draviden languages.
3. Analyse the Draviden languages based on phonetics, phrases and sentences.
4. Understand modern Tamil literature through poetry, Drama etc.,
5. Understand various literary movements.
6. Understand the principles and hypothesis of Tamil Literature.

7. Understand the history and culture of Tamils through Tamil Literature
8. trace the post modern elements found in Modern Tamil Literature